www.Padasalai.Net www.TrbTnpsc.com

# மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2025

## ஆறாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 2.00 மணி மதிப்பெண்கள் : 60

### பகுதி - I

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6 x 1 = 6

1. கலைக் கூடமாகக் காட்சி தருவது ________
   அ) சிற்பக்கூடம் ஆ) ஓவியக்கூடம் இ) பள்ளிக்கூடம் ஈ) சிறைக்கூடம்
2. பரிசு பெறும் போது நம் மனநிலை ________ ஆக இருக்கும்.
   அ) கவலை ஆ) துன்பம் இ) மகிழ்ச்சி ஈ) சோர்வு
3. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் ________
   அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை இ) மனித நேயம் ஈ) மனித உடைமை
4. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்து சென்ற தீவு ________
   அ) இலங்கைத் தீவு ஆ) இலட்சத்தீவு இ) மணிபல்லவத்தீவு ஈ) மாலத்தீவு
5. 'சுறுசுறுப்பு' என்னும் சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ________
   அ) அழிவு ஆ) துன்பம் இ) சோம்பல் ஈ) சோகம்
6. இடுகுறிச்சிறப்புப் பெயரை வட்டமிடுக
   அ) வயல் ஆ) வாழை இ) மீன்கொத்தி ஈ) பறவை

### பகுதி - II

ஆ) பொருத்துக. 4 x 1 = 4

7. வள்ளலார் - நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்
8. இலக்கிய மாநாடு - குழந்தை உரிமைகளுக்காக பாடுபட்டவர்
9. அன்னைத்தெரசா - சென்னை
10. கைலாஷ் சத்யார்த்தி - பசிப்பிணி போக்கியவர்

### பகுதி - III

இ) சொற்றொடரில் அமைத்து எழுது. 2 x 1 = 2

11. பாதுகாக்க
12. அமைதி

### பகுதி - IV

ஈ) குறுகிய விடையளி (எவையேனும் ஐந்து மட்டும்) 5 x 2 = 10

13. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
14. உழைக்கும்போது என்னவாக ஆகிறோம்?
15. "கோமுகி" என்பதன் பொருள் யாது?
16. அரசனாலும் செய்ய முடியாத செயல் எது?
17. யாரால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது?
18. "அணி" என்ற சொல்லின் பொருள் யாது?
19. காரணப்பெயர் என்றால் என்ன?

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - V

உ) அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

20. தம் உயிரிபோல் எனத் தொடங்கும் தாயுமானவர் பாடல்
21. 'மனத்துக்கண்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - VI

ஊ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 x 5 = 10

22. பராபரக் கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?
23. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது?
24. பின்வரும் தொடர்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எவ்வகை பெயர்கள் என எழுது.

விடியலில் துயில் எழுந்தேன் - ________
இறைவனைக் கை தொழுதேன் - ________
நான் மதுரைக்குச் சென்றேன் - ________
புத்தகம் வாங்கி வந்தேன் - ________
நன்மைகள் பெருகும் இனி - ________

25. சொற்களின் வகைகளை எழுதி எடுத்துக் காட்டு தருக.

## பகுதி - VII

எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1 x 6 = 6

26. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்டெடுத்த நிகழ்வினை விளக்குக.
27. 'முடிவில் ஒரு தொடக்கம்' சிறுகதையைச் சுருக்கி எழுதுக.

ஏ) கடிதம் / கட்டுரை எழுதுக. 1 x 6 = 6

28. அ) தேசிய ஒருமைப்பாடு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) நூலக வசதி வேண்டி விண்ணப்பக் கடிதம் எழுதுக.

## பகுதி - VIII

ஐ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 5 x 2 = 10

29. இரு பொருள் தருக:- அ) படி ஆ) மாலை
30. கலைச்சொல் தருக:- அ) MERCY ஆ) LIFT
31. அகராதியைப் பயன்படுத்தி பொருள் தருக.

அ) தேசம் ஆ) அச்சம்

32. ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுது.

மனம் - மணம்

33. கட்டங்களில் உள்ள சொற்களைக் கொண்டு தொடர்கள் உருவாக்கு

| | | |
|---|---|---|
| நேற்று<br>இன்று<br>நாளை | எங்கள் ஊரில் மழை | பெய்கிறது<br>பெய்யும்<br>பெய்தது |

******

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner